# EXAMINATION UNDER ORDER X RULE 2 CPC
# IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
# KRISHNAGIRI DISTRICT

**Case No.** OS.82/2023

**Name** ராஜா **Father Name**

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 26.02.2026 administered by District Munsif, Uthangarai.

**துவக்க நேரம் - 11.40 AM**

வாதி கட்டளை 10 விதி 2 சிபிசி படி விசாரணைக்காக முன்னிலையாகி விசாரணை

**நீதிமன்ற கேள்வி:** எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளீர்கள்?

**பதில்:** தாவா சொத்தை நான் கிரயம் வாங்கி வீடு கட்டி உள்ளேன். அது திருப்பத்தூரை சேர்ந்த கலீல் என்பவர் அந்த சொத்து தனக்கு பாத்தியம் இருப்பதாக வழக்கு தாக்கல் செய்திருந்தார். அவர் பிரதிவாதிகளின் தந்தை ஆவார்.

**நீதிமன்ற கேள்வி:** அந்த வழக்கு எந்த நீதிமன்றத்தில் நடைபெற்றது?

**பதில்:** இதே நீதிமன்றத்தில் தான் நடைபெற்றது.

**நீதிமன்ற கேள்வி:** அந்த வழக்கில் உங்களுக்கு சம்மன் வந்ததா?

**பதில்:** வந்தது.

**நீதிமன்ற கேள்வி:** அந்த வழக்கை வழக்கறிஞர் வைத்து நடத்தினீர்களா?

**பதில்:** இந்த வழக்கின் வழக்கறிஞரான திரு வடிவேல் அவர்களை வழக்கறிஞராக நியமித்து நடத்தினோம்.

**நீதிமன்ற கேள்வி:** அந்த வழக்கு தீர்ப்பு ஆனதா?

**பதில்:** எனக்கு தெரியவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இந்த வழக்கில் 30/7/2023 தேதியில் 2, 3 பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக கூறியுள்ளீர்கள் என்ன இடையூறு செய்தார்கள்?

**பதில்:** 2, 3 பிரதிவாதிகளும் கிராம நிர்வாக அலுவலரும் நீதிமன்ற ஊழியரும் தாவா சொத்திற்கு வந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தனர் அதன் பின் என்னை வழக்கறிஞரை சென்று பார்க்குமாறு கூறினர்.

**நீதிமன்ற கேள்வி:**இதற்கு முன் கலீல் என்பவர் தாக்கல் செய்த வழக்கு விவரத்தை தாவாவில் கூறியுள்ளீர்களா?

**பதில்:** கூறியுள்ளேன்.

**நீதிமன்ற கேள்வி:** இந்த வழக்கை நிராகரிக்க வேண்டும் என்று பிரதிவாதிகள் தாக்கல் செய்த மனுவை பார்த்தீர்களா?

**பதில்:** நான் பார்க்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** முன்னதாக நடைபெற்ற வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பை நிறைவேற்ற வேண்டும் என்று பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள நிறைவேற்றுமனுவில் நீங்கள் முன்னிலை ஆகி உள்ளீர்களா?

**பதில்:** நான் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நீதிமன்றத்திற்கு வந்து செல்கிறேன் எந்த வழக்கிற்காக வந்து செல்கிறேன் என்று எனக்கே தெரியவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இந்த நீதிமன்றத்தில் உங்கள் சார்பாக தாக்கல் செய்யப்படும் மனுக்களில் நீங்கள்தான் கையொப்பம் செய்கிறீர்களா?

**பதில்:** ஆமாம். வழக்கறிஞர் கையொப்பம் கேட்பார் அதில் நான் கையொப்பம் செய்வேன்.

**நீதிமன்ற கேள்வி:** அவ்வாறு நீங்கள் கையொப்பம் செய்யும் தாளில் என்ன உள்ளது என்று படித்து பார்த்து கையொப்பம் செய்வீர்களா?

**பதில்:** இல்லை, வழக்கறிஞர் தான் கேட்கிறார் என்பதால் நான் படிக்காமல் கையொப்பம் செய்து கொடுப்பேன்.

**நீதிமன்ற கேள்வி:**நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கில் இதற்கு முன்பு நடைபெற்ற வழக்கை மறைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது உங்களுக்கு தெரியுமா?

**பதில்:** அது எனக்கு தெரியாது.

**நீதிமன்ற கேள்வி:** வழக்குகளில் நீங்கள் செய்த கையொப்பத்திற்கு நீங்கள் தான் பொறுப்பாக முடியும். பழைய வழக்கை மறைத்து தாக்கல் செய்துள்ளதற்காக பொறுப்பேற்கிறீர்களா?

**பதில்:** அது குறித்து எனக்கு எதுவுமே தெரியாது. வழக்கறிஞர் அவசரமாக கையொப்பம் கேட்கும் சமயத்தில் நான் கையொப்பம் செய்து கொடுத்து விடுவேன். நான் அதுபோல் எதுவும் செய்யவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இதற்கு முன்பு நடைபெற்ற வழக்கில் உங்களுடைய கிரைய ஆவணம் ரத்தான விவரம் தெரியுமா?

**பதில்:** அது எனக்கு தெரியாது.

**முடிவு நேரம் – 12.08 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- XXXXX

District Munsif(FAC),
Uthangarai.